# ஆண்டாள் பாசுரங்களில் உருக்காட்சிகள்

முனைவர் யு.துர்காதேவி, உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை

வேல்ஸ் அறிவியல் தொழில்நுட்ப உயர் ஆராய்ச்சி நிறுவனம்

பல்லாவரம், சென்னை – 600117.

---

**ஆய்வுச்சுருக்கம்**

ஆண்டாளின் திருப்பாவை மற்றும் நாச்சியார் திருமொழி ஆகிய பாசுரங்களில் இத்தகைய உருக்காட்சிகள் பரவலாக இடம்பெற்றுள்ளன. இதனால், அவற்றைப் பயிலும் அனைவரின் மனதில் உயிர்ப்பான காட்சிகள் தோன்றி, கவிதை அனுபவம் செறிவடைகிறது. மேலும், இவ்வுருக்காட்சிகள் பக்தி உணர்வின் உச்சிக்குக் கொண்டு சேர்க்கும் வல்லமையையும் உடையதாக அமைகின்றன. ஆண்டாள் பாசுரங்களில் உருக்காட்சிகள் எவ்வாறு அமைந்துள்ளது என்பதை எடுத்தியம்புவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**திறவுச்சொற்கள்**

உருக்காட்சி – கட்புலம் – ஒலி -சுவை – நாற்றப்புல - வெப்பம் - காட்சி -உணர்வு.

**முன்னுரை**

உருக்காட்சி என்பது, கவிஞர் சொற்களின் வழியாக வாசகனின் புலன்களை ஈர்க்கும் வகையில் உருவாக்கும் ஒரு முக்கியமான இலக்கிய உத்தியாகும். புலன்களின் மூலம் படிப்பவரின் உணர்வுகளையும் அறிவையும் தூண்டி எழுச்சியுறச் செய்யும் திறன் இதற்குண்டு. இதனை

முன்னிட்டு, கவிதைகளில் உருக்காட்சிகள் சிறப்பாகப் பயன்படுத்தப்படுகின்றன என அறிஞர்கள் கருத்து தெரிவிக்கின்றனர்.

ஆங்கிலத் திறனாய்வாளரான பாட்டன், தனது கவிதைத் திறனாய்வு என்ற நூலில், புலன்களை நோக்கி உரையாடும் தன்மையை அடிப்படையாகக் கொண்டு உருக்காட்சிகள் பலவகைப்படுகின்றன எனக் கூறுகிறார். அவை செவிப்புல உருக்காட்சிகள், கண்புல உருக்காட்சிகள், சுவைப்புல உருக்காட்சிகள், மணப்புல உருக்காட்சிகள், தொடுபுல உருக்காட்சிகள், இயக்கப்புல உருக்காட்சிகள் மற்றும் மரபுவழி உருக்காட்சிகள் என வகைப்படுத்தப்படுகின்றன.

சொற்கள் என்பது எண்ணங்களுக்கும் புலனுணர்வுகளுக்கும் இடையிலான குறியீடுகளாக அமைகின்றன. ஒரு கவிதையை வாசிக்கும் போது அதிலுள்ள சொற்களும் சொற்றொடர்களும் வாசகனின் மனக்கண்ணில் பலவிதமான காட்சிகளை உருவாக்குகின்றன. இவ்வாறு உருவாகும் உருக்காட்சிகள், புலன்களின் மட்டத்தில் மட்டுமல்லாமல், கருத்துணர்வின் நிலைக்கும் ஊக்கமளித்து, கவிதை அனுபவத்தை ஆழப்படுத்துகின்றன.

மேலும், சில சொற்கள் வாசகனின் மனதில் ஏற்கனவே பதிந்துள்ள (கட்டுண்ட) காட்சிகளையும், புதிய (விடுதலை) காட்சிகளையும் உருவாக்குகின்றன. இவ்விரு வகை உருக்காட்சிகளும் கவிதையை உணர்ந்து ரசிப்பதற்கு இன்றியமையாத கூறுகளாக விளங்குகின்றன.

**கட்புல உருக்காட்சிகள்**

பல்வேறு உருக்காட்சிகளில், கண்புலத்தை (காட்சி உணர்வை) ஈர்க்கும் உருக்காட்சிகள் மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்தவை. இத்தகைய காட்சியுருக்காட்சிகளே வாசகர்களின் மனதில் நீடித்த தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. இதற்குக் காரணமாக, கண்புல உணர்வை ஏந்தும்

நரம்பு அமைப்பு மற்ற புலன்களை விட வலிமையானதாக இருப்பதும் குறிப்பிடத்தக்கது. ஆண்டாள் பாசுரங்களில் கண்புலத்தை ஈர்க்கும் பல உருக்காட்சிகள் காணப்படுகின்றன.

**"எழிலுடைய அம்மனைமீர்! என்னரங்கத் தின்னமுதர்**

**குழலழகர், வாயழகர், கண்ணழகர், கொப்பூழில்**

**எழுகமலப் பூவழகர்…"[1]**

என்ற பாசுரத்தில், திருமாலின் திருமேனி அழகு பல கோணங்களில் சித்தரிக்கப்படுகிறது. இங்கு "இன்னமுதர்" என்பது சுவைப்புல உருக்காட்சியாக அமைந்தாலும், "குழலழகர்", "வாயழகர்", "கண்ணழகர்", "கமலப்பூவழகர்" போன்றவை அனைத்தும் கண்புல உருக்காட்சிகளாகும். இவ்வாறு பல புலன்கள் இணைந்ததால், இது கலவை உருக்காட்சியாகவும், கற்பனை நயத்துடனும் விளங்குகிறது.

**செவிப்புல உருக்காட்சிகள்**

செவியால் உணரப்படும் ஒலிகளின் மூலம் மனதை ஈர்க்கும் உருக்காட்சிகள் செவிப்புல உருக்காட்சிகள் ஆகும். ஆண்டாளின் திருப்பாவை பாசுரங்களில் இத்தகைய உருக்காட்சிகள் சிறப்பாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன.

**"கீசுகீசு என்றெங்கும் ஆனைச்சாத்தன் கலந்து**

**பேசின பேச்சரவம் கேட்டிலையோ? …**

**வாச நறுங்குழல் ஆய்ச்சியர் மத்தினால்**

**ஓசைப்படுத்த தயிரரவம் கேட்டிலையோ?" [2]**

என்ற பாசுரத்தில், பலவிதமான ஒலிக் காட்சிகள் அடுக்காக வருகின்றன. இதில், "கீசு கீசு" எனும் பறவைகளின் குரல், ஆனைச்சாத்தனின் பேச்சொலி, பெண்களின் கைகலக்க ஒலி, தயிர் கடைக்கும் ஓசை,

இறைவனைப் பாடும் குரல் இவை அனைத்தும் செவிப்புல உருக்காட்சிகளாகும்.

அதே நேரத்தில், “வாச நறுங்குழல்” என்பது மணப்புல (நாற்றப்புல) உருக்காட்சியையும், “தேசமுடையாய்” என்பது கண்புல உருக்காட்சியையும் உணர்த்துகின்றது. எனவே, இப்பாசுரம் பல புலன்கள் கலந்து அமைந்த கலவை உருக்காட்சியாக விளங்குகிறது.

**“புள்ளும் சிலம்பின காண்…**

**வெள்ளை விளிசங்கின் பேரரவம் கேட்டிலையோ”[3]**

என்ற இடத்தில், சங்கின் ஒலி மற்றும் பறவைகளின் கீச்சு செவிப்புல உருக்காட்சிகளாகவும், “வெள்ளை விளிசங்கு” கண்புல உருக்காட்சியாகவும் அமைகிறது.

**சுவைப்புல உருக்காட்சிகள்**

நாவால் அனுபவிக்கப்படும் சுவையை உணர்த்தும் உருக்காட்சிகள் சுவைப்புல உருக்காட்சிகள் ஆகும். ஆண்டாள் பாசுரங்களில், இறைவனை “அமுது” எனக் குறிக்கும் இடங்களில் இத்தகைய உருக்காட்சிகள் அதிகமாகக் காணப்படுகின்றன.

**“ஆரா அமுத அனையான் தன்**

**அமுத வாயில் ஊறிய**

**நீர் தான் கொணர்ந்து…”[4]**

**“ஆண்டவனும் அமுதன்; அவன் வாயில்**

**ஊறும் உமிழ் நீரும் அமுதம்” [5]**

என்ற அடிகளில், இறைவன் முடிவில்லா அமுதமாகவும், அவன் வாயில் ஊறும் நீரே அமுதமாகவும் சித்தரிக்கப்படுகிறது. இதன் மூலம், இறைவனை அனுபவிப்பது சுவை உணர்வின் உச்சமாகக் கூறப்படுகிறது.

ஆண்டாளின் காதல் உணர்வு இங்கு சுவைப்புல உருக்காட்சியின் வழியாக வெளிப்படுகிறது.

**நாற்றப்புல உருக்காட்சிகள்**

மணத்தை உணர்த்தும் வகையில் அமைந்துள்ள உருக்காட்சிகள் நாற்றப்புல உருக்காட்சிகள் எனப்படுகின்றன.

> **“கருப்பூரம் நாறுமோ? கமலப்பூ நாறுமோ?**
> **திருப்பவளச் செவ்வாய்தான் தித்தித் திருக்குமோ?”[6]**

என்ற பாசுரத்தில், ஆண்டாள் திருச்சங்கத்திடம் வினவுவதன் மூலம், கண்ணபிரானின் வாயின் மணத்தையும் சுவையையும் ஒப்பிடுகிறார்.

இங்கு கருப்பூரத்தின் வாசனையும், தாமரைப்பூவின் மணமும் எடுத்துக்காட்டுகளாகக் கொண்டு, இறைவனின் தெய்வீக மணம் சித்தரிக்கப்படுகிறது. இதனால், நாற்றப்புலத்துடன் சேர்ந்து சுவைப்புல உருக்காட்சியும் கலந்துள்ளது. மேலும்,

> **“கத்தம் கமழும் குழலி”[7]**

என்ற அடியிலும் மணத்தை உணர்த்தும் நாற்றப்புல உருக்காட்சி தெளிவாகக் காணப்படுகிறது.

இவ்வாறு, ஆண்டாள் பாசுரங்களில் பல்வேறு புலன்களைத் தூண்டும் உருக்காட்சிகள் நயமுடன் அமைந்து, அனைவரின் மனதில் உயிர்ப்பான அனுபவத்தை உருவாக்குகின்றன.

**தொடுபுல (நொப்புல) உருக்காட்சிகள்**

தொடுதலின் மூலம் அனுபவிக்கப்படக்கூடிய உணர்வுகளை வெளிப்படுத்தும் உருக்காட்சிகள் தொடுபுல (அல்லது நொப்புல) உருக்காட்சிகள் எனப்படுகின்றன. இவ்வகை உருக்காட்சிகளும் ஆண்டாள் பாசுரங்களில் சிறப்பாக இடம்பெற்றுள்ளன.

> **“குத்து விளக்கெரியக் கோட்டுக்கால் கட்டின் மேல்**

**மெத்தென்ன பஞ்சசயனத்தின் மேலேறிக்**

**கொத்தலர் பூங்குழல் நப்பின்னை கொங்கைமேல்**

**வைத்துக் கிடந்த மலர்மார்பா”[8]**

என்ற அடிகளில், காட்சிநயமும் தொடுபுல உணர்வும் இணைந்து வெளிப்படுகின்றன. இங்கு “குத்துவிளக்கு எரிதல்”, “கோட்டுக்கால் கட்டில்”, “நப்பின்னையின் அணைப்பு” போன்றவை கண்புல உருக்காட்சிகளாக அமைய, “மெத்தென்ற பஞ்சசயனம்” என்பது மென்மையான தொடு உணர்வைத் தரும் தொடுபுல உருக்காட்சியாக அமைகிறது. இவ்வாறு பல புலன்கள் கலந்து அமைந்ததால், இப்பாசுரம் கலவை உருக்காட்சியாகவும், அனுபவ நயத்தை உயர்த்துவதாகவும் விளங்குகிறது. மேலும்,

**“செற்றார்க்கு வெப்பங் கொடுக்கும் விமலா”[9]**

என்ற தொடரில் “வெப்பம்” எனும் உணர்வு உடலால் உணரப்படும் தொடுபுல அனுபவத்தை உணர்த்துகிறது. ஆகையால், இது தொடுபுல உருக்காட்சியின் ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும். நாச்சியார் திருமொழியில் இடம்பெறும்,

**“காமத்தீயுள் புகுந்து கத்துவப்பட்டு இடைக்கங்குல்…”[10]**

என்ற அடிகளில், ஆண்டாள் தன் காதல் வேதனையை தீயினால் எரியப்படுவது போன்ற அனுபவத்துடன் ஒப்பிட்டு வெளிப்படுத்துகிறார். இங்கு “காமத்தீ” என்ற சொல் உடலை எரிக்கும் வெப்பத்தை உணர்த்தும் தொடுபுல உருக்காட்சியாக அமைகிறது. இதன் மூலம், ஆண்டாள் தனது உள்ளார்ந்த காதல் உணர்வை உடல் உணர்வுகளோடு இணைத்து தீவிரமாக வெளிப்படுத்தியுள்ளார். இவ்வாறு, ஆண்டாள் பாசுரங்களில் தொடுபுல உருக்காட்சிகள் உணர்ச்சியின் ஆழத்தையும் அனுபவத்தின் தீவிரத்தையும் வெளிப்படுத்தும் முக்கிய கூறுகளாக விளங்குகின்றன.

உருக்காட்சி என்பது, சொற்களின் வழியாகப் புலன்களுக்கு இன்பம் தரும் காட்சிகளை உருவாக்கும் உத்தியாகும். இது அனைவரின் உணர்ச்சியையும் சிந்தனையையும் தூண்டுகின்றது. ஆகவே கவிதைகளில் உருக்காட்சிகள் பரவலாகப் பயன்படுத்தப்படுகின்றன.

**அடிக்குறிப்புகள்**

1. ஆண்டாள், திருப்பாவை.  ப.608
2. மேலது. பா.7
3. மேலது. பா.6
4. நா.தி.பி.. பா. 630
5. மேலது. பா.567
6. ஆண்டாள், திருப்பாவை, பா.18
7. மேலது, பா.19
8. மேலது, பா.20
9. நா.தி.பி.. பா.578
10. ஆண்டாள், திருப்பாவை, பா.4